17.08.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய உள் தமிழகத்தில் திங்கள்கிழமை பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பச் சலனம் காரணமாக, கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்தது. குறிப்பாக, சென்னையிலும் புறநகர்ப் பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்து வந்தது.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக சென்னை, புறநகர்ப் பகுதிகளில் பகல் நேரங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

வெப்பச் சலனம் நீடிப்பதால் தமிழகம், புதுச்சேரியில் திங்கள்கிழமை ஆங்காங்கே பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரியாக இருக்கும். அடுத்து வரும் இரண்டு நாள்களுக்கும் தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய உள் தமிழகத்தில் பலத்த மழை பெய்யும்.

110.மி.மீ மழை: கடந்த 24 மணி நேரத்தில், திருவண்ணாமலையில் அதிகபட்சமாக 110 மி.மீட்டர் மழை பதிவானது. அதேபோல திருவாடானை, சாத்தனூர் அணையில் 80 மி.மீ, திருக்கோவிலூர், செட்டிகுளம், விழுப்புரம், அரூரில் 70 மி.மீ, வேலூர் மாவட்டம்

காவேரிப்பாக்கம், ஊத்தங்கரை ஆகிய இடங்களில் 60 மி.மீட்டர் மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பவானிசாகர் அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**



ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (ஆக.16) முதல் தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய், நீட்டிப்புக் கால்வாய், ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும், சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும் முதல் பருவ நன்செய் பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்தன.

இதை ஏற்று ஞாயிற்றுக்கிழமை (ஆக. 16) முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளேன். இதனால், ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களில்

உள்ள ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

**வேளாண் உற்பத்தியை பெருக்குவது அவசியம்: ஆட்சியர்**

நவீன தொழில்நுட்ப வசதிகளின் மூலம் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றி, திண்டுக்கல் மாவட்டத்தின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என, மாவட்ட ஆட்சியர் த.ந. ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

வேளாண் பொறியியல் துறை சார்பில், திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்படும் திட்டங்கள் குறித்து, மாவட்ட ஆட்சியர் த.ந. ஹரிஹரன் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார். திண்டுக்கல் அடுத்துள்ள தோட்டனூத்து ஊராட்சியில் நுண்ணீர் பாசனத்துடன் கூடிய சோலார் பம்புசெட்டு திட்டத்தை ஆய்வு செய்த பின், அவர் தெரிவித்தது: வேளாண்மைத் துறையில் நுண்ணீர் பாசனத்துடன் சூரிய ஒளிக்கேற்ப நகரக்கூடிய சோலார் தகடுகள் கொண்ட சோலார் பம்பு செட்டுகள் அமைக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

80 சதவீத மானியத்துடன் கூடிய இத்திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டத்தில் 60 விவசாயிகளுக்கு ரூ. 2.20 கோடி வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி, வேளாண்மை பொறியியல் துறை மூலம் மானிய விலையில் பண்ணைக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, 40 முதல் 50 சதவீத மானியத்தில் டிராக்டர், பவர் டில்லர், களையெடுக்கும் கருவி, ரோட்டவேட்டர், தெளிப்பான், குழி எடுக்கும் கருவி மற்றும் தட்டை வெட்டும் கருவி வழங்கப்படுகின்றன. கடந்த 2014-15 ஆம் ஆண்டில் மட்டும் ரூ. 91 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தியை அதிகரிக்க, தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவது அவசியம். அதற்காக நில மேம்பாட்டுத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நுண்ணீர் பாசனத்துடன் கூடிய சோலார் பம்பு செட்டுகளை பயன்படுத்தி, விளை நிலங்களின் பரப்பை அதிகரிக்க விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் அவர்.

ஆய்வின்போது, வேளாண் செயற்பொறியாளர் ராஜேந்திரன், உதவிச் செயற்பொறியாளர் பரந்தாமன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இ. சாலிதளபதி ஆகியோர் உடனிருந்தனர்.

**ரூ.20 கோடியில் துணை அணை திட்டம்: மேயர் அறிவிப்பு**

திண்டுக்கல் நகரில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், ஆத்தூர் நீர் தேக்கம் அருகே ரூ. 20 கோடியில் புதிய அணை கட்டப்படும் என, மேயர் வி. மருதராஜ் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாநகராட்சி வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சியில், மேயர் வி. மருதராஜ் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, சிறப்பாக பணிபுரிந்த 7 பணியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கத்தை வழங்கி, அவர் மேலும் பேசுகையில், திண்டுக்கல் மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, ஆத்தூர் காமராஜர் நீர் தேக்கத்தின் அருகில், துணை அணை கட்டுவதற்கு ரூ. 20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையர் மனோகரன், துணை மேயர் துளசிராம், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு காந்தி மன்றம்: திண்டுக்கல் கவடக்காரத் தெருவில், தமிழ்நாடு காந்தி மன்றம் சார்பில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு, மன்றத்தின் பொதுச் செயலர் சொ. மருது தலைமை வகித்தார். காங்கிரஸ் கட்சியின் மாநில முன்னாள் துணைத் தலைவர் அப்துல் ஜபார் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில், ஏ. ஜெயசீலன், பி. ஜெயபிரகாஷ், சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**காட்டுப் பன்றிகளால் நிலக்கடலை பயிர்கள் சேதம்: விவசாயிகள் புகார்**

தேவாரம், கோம்பை ஆகிய பகுதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலைப் பயிர்களை, காட்டுப் பன்றிகள் சேதப்படுத்தி வருவதாக விசாயிகள் புகார் தெரிவித்தனர்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மாவட்ட வனத் துறை சார்பில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட வன அலுவலர் மாரிமுத்து தலைமை வகித்தார். மேகமலை வன உயிரின சரணாலய காப்பாளர் சொர்ணப்பன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட விசாயிகள் கூறியது: மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் மூலவைகை ஆறு, மூல வைகை ஆற்றில் சங்கமிக்கும் கிளை ஆறுகளான மஞ்சளார், பாம்பாறு, கல்லாறு, வராகநதி, வரட்டாறு, பனசலாறு, வாழையாறு, கொட்டகுடி ஆறு, சண்முகநதி ஆகியவற்றில் மண் அரிப்பு ஏற்படாத வகையில் தடுப்பணைகள் கட்ட வேண்டும்.

தேவாரம், கோம்பை ஆகிய பகுதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ள விவசாய நிலங்களில் காட்டுப் பன்றிகள் புகுந்து நிலக்கடலை பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. மலையடிவார விவசாய நிலங்களுக்குள் காட்டுப்பன்றி உள்ளிட்ட வன விலங்குகள் புகுவதை தடுக்க, வனத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேகமலை வன உயிரின சரணலாயத்துக்கு உள்பட்ட வனப் பகுதிக்குள் 5,000 மலை மாடுகளுக்கும், போடி வடக்குமலை வனப் பகுதியில் 3,000 மலை மாடுகளுக்கும் மேய்ச்சல் அனுமதிச் சீட்டு வழங்கவேண்டும் என்றனர்.

மாவட்ட வன அலுவலர் கூறுகையில், விவசாய நிலங்களுக்குள் வன விலங்குகள் புகுவதை தடுக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மலை மாடுகளுக்கு மேய்ச்சல் அனுமதிச் சீட்டு கோரி, மாவட்ட வன அலுவலகம் மற்றும் வன உயிரின சரணலாயக் காப்பாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என்றார்.

**விதை விதைப்பான் கருவி குறித்த செயல் விளக்கம்**

பரமக்குடி வட்டம் நயினார் கோயில் ஒன்றியம் காடரந்தகுடி கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் முன்னிலையில் விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை சார்பாக விதை விதைப்பான் கருவி குறித்த செயல்விளக்கம் வியாழக்கிழமை செய்து காட்டப்பட்டது.

இக்கருவியின் விலை ரூ.45 ஆயிரம் ஆகும். இக்கருவி வேளாண்மை பொறியியல் துறையில் சிறு,குறு, பெண், தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியத்திலும் வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் யுவராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்), ஆர்.அறிவரசன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் என்.வி.கிருஷ்ணமூர்த்தி, தோட்டக் கலைத் துறை இணை இயக்குநர் (பொ) பா.இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை விதைப்பான் கருவி: ஆட்சியர்**

வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு விதை விதைப்பான் கருவி வழங்கப்பட இருப்பதாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பரமக்குடி வட்டம் நயினார்கோயில் ஒன்றியத்துக்கு உள்பட்ட காரடர்ந்தகுடி கிராமத்தில் ஆட்சியர் க.நந்தகுமார் முன்னிலையில் விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் விதை விதைப்பான் கருவி குறித்த செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. அதைப் பார்வையிட்ட பிறகு ஆட்சியர் கூறுகையில் இக்கருவியின் விலை ரூ.45 ஆயிரம். இக்கருவி வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் சிறு, குறு, பெண்கள், தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு 50 சத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியத்திலும் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார். செயல் விளக்கத்தின் போது வேளாண்மைப் பொறியியல் துறையின் செயற்பொறியாளர் எம்.யுவராஜ்,

ஆட்சியரின் நேர்முக உதவியாளர் விவசாயம் ஆர்.அறிவாசன்,வேளாண்மைத் துறையின் இணை இயக்குநர் என்.வி. கிருஷ்ணமூர்த்தி, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் பா.இளங்கோவன் ஆகியோரும் உடனிருந்தனர்.

**கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு: வேளாண் அதிகாரி வேண்டுகோள்**

திருவாடானை வட்டாரத்தில் விவசாயிகள் நெல் விதைக்கும் கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு செய்து அதிக மகசூல் பெறலாம் என வேளாண் உதவி இயக்குனர் சீ.நாகராஜ் தெரிவித்தார்.

திருவாடானை தாலுகா முழுவதும் பருவ மழையை நம்பி சுமார் 25 ஆயிரம் ஹெக்டேரில் நெல் விவசாயம் நடைபெற்று வருகிறது. மானாவாரியில் சுமார் 8500 ஹெக்டேர் இரவையிலும், 16,500 ஹெக்டேர் நேரடி நெல் விதைப்பின் மூலமும் அதிக அளவில் விதைகள் வாங்குவதற்கு செலவு செய்யப்படுகிறது.

மேலும் நெல் விதைகளின் முளைப்புத் திறன் சீராக இல்லாமல் எதிர்பார்க்கும் மகசூலை எட்ட முடியாத நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே நெல் நேரடி வரிசை விதைப்பு கருவி மூலம் விதைப்பு செய்ய வேண்டும்.

நெல் நேரடி விதைப்புக்குரிய கருவியினை பயன்படுத்துவதால் முளைப்புத் திறன் அதிகரித்து சரியான ஆழத்தில் வரிசை வரிசையாக விதைகள் விழுவதால் பயிர் எண்ணிக்கை நன்றாக பராமரிக்கப்படுகிறது. விதைகள் தேவை அளவும் குறைந்து, இடுபொருள்கள் செலவும் குறைகிறது.

அத்துடன் மருந்து தெளிப்பு, உரமிடுதல் போன்ற பணிகளை இலகுவாக மேற்கொள்ள முடியும். ஆதலால் விவசாயிகள் நடப்பு பருவத்தில் விதை விதைக்கும் கருவி மூலம் நெல் நேரடி விதைப்பு செய்யும்படி கேட்டுக் கொள்வதாக திருவாடானை வேளாண் உதவி இயக்குனர் சீ.நாகராஜ் தெரிவித்துள்ளார்.

**கோபி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் விதை நெல், உரம் விற்பனை**

முதல்போக சாகுபடி விவசாயிகளுக்காக, கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 143 டன் விதை நெல், 86 டன் உரம் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், தரமான விதை நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, கீழ்பவானி மற்றும் மேட்டூர் பாசன பகுதிகளில், கோபி கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், தாய் விதை நெல் தரப்படுகிறது.

விவசாயிகள் தங்கள் வயலில், இதனை பயிரிட்டு வேளாண் துறையின்

பரிந்துரைக்கேற்ப, அதை விதை நெல்லாக மீண்டும் உற்பத்தி செய்கின்றனர். இவ்வாறு உற்பத்தியாகும் விதை நெல், மீண்டும் சங்கத்துக்கே வழங்கப்படுகிறது. இந்த விதை நெல் அதிக முளைப்பு திறன் கொண்ட விதை நெல்லாக நேர்த்தி செய்யப்படுகிறது.

பின்னர் இவை, காவிரி டெல்டா பகுதிகள், கீழ்பவானி, அமராவதி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசனப் பகுதியில் உள்ள விவசாயிகளின் தேவைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதற்கிடையே, கடைக்கோடி விவசாயிகள் பாசன வசதி பெற, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன வாய்க்காலில், ரூ. 40.45 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டு பணி முடிந்து, கடந்த ஜூலை 30-ஆம் தேதி முதல் போக பாசனத்துக்கு 135 நாள்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

தற்போது, இரு பாசன சபையிலும், விவசாயிகள் நாற்றாங்கல் அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். முதல்போக விவசாயிகளுக்காக, கூட்டுறவு சங்கத்தில் 143 டன் விதை நெல், 86 டன் உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

**திருவண்ணாமலையில் பலத்த மழை**

திருவண்ணாமலையில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை இடியுடன் கூடிய பலத்த மழை

பெய்தது.திருவண்ணாமலை, போளூர், ஆரணி உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இந்த நிலையில், சனிக்கிழமை இரவு 10 மணியளவில் திடீரென தூறல் மழை பெய்யத் தொடங்கியது.சிறிது நேரத்தில் திருவண்ணாமலை, வேங்கிக்கால், ஆட்சியர் அலுவலகம், அடி அண்ணாமலை, இனாம்காரியந்தல், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து நீண்ட நேரமாக இடி இடித்துக் கொண்டே இருந்ததால் வானத்தில் மின்னல் அடிக்கடி தோன்றியது.இதேபோல, தொடர்ந்து விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால், மாவட்டத்திலேயே அதிகபட்சமாக திருவண்ணாமலையில் 105.2 மில்லி மீட்டர் மழை பதிவானது.

மேலும், செங்கத்தில் 28.2 மி.மீ, தண்டராம்பட்டில் 77.2 மி.மீ, போளூரில் 18.6 மி.மீ, ஆரணியில் 14.6 மி.மீ, வந்தவாசியில் 19 மி.மீ, செய்யாறில் 14.5 மில்லி மீட்டர் மழை பெய்தது.

இந்த மழையால் விவசாய நிலங்கள், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

**மேட்டூர் அணையில் இருந்து 40 ஆண்டுகளில் 2,910 டிஎம்சி உபரி நீர் வெளியேற்றம்**

மேட்டூர் அணை கட்டப்பட்ட 40 ஆண்டுகளில் இதுவரை 2,910 டிஎம்சி உபரிநீர் வெளியேற்றப்பட்டுள்ளதாக பொதுப் பணித் துறை ஓய்வுபெற்ற மேற்பார்வைப் பொறியாளர் ஆர்.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்திய அரசியல் அமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினர் டி.எம்.காளியண்ணனுக்கு நாமக்கல்லில் ஞாயிற்றுக்கிழமை நடந்த பாராட்டு விழாவில் காவிரி உபரி நீர்-சரபங்கா-திருமணி முத்தாறு கால்வாய் இணைப்பு திட்டம் என்ற தலைப்பில் அவர் மேலும் பேசியது:

மேட்டூர் அணை கட்டிமுடிக்கப்பட்ட கடந்த 77 ஆண்டுகளில் 40 முறை அணை நிரம்பி உபரி நீர் வெளியேற்றப்பட்டுள்ளது. இதுவரை 2,910 டிஎம்சி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்பட்டுள்ளது. உபரி நீரில் 5 டிஎம்சி தண்ணீரை மேட்டூர் 14 கண் மதகு வழியாக சரபங்கா நதிக்கு

கொண்டுவந்து அங்கிருந்து திருமணிமுத்தாறு வழியாகச் சென்று காவிரி ஆற்றி0ல் இணைக்கும் திட்டம் கடந்த 1994 -ஆம் ஆண்டு அரசால் அறிவிக்கப்பட்டது.

1994-95-இல் உத்தேச திட்ட மதிப்பீடு ரூ.389 கோடி. இது, 1998-99-இல் ரூ.619 கோடியாக திருத்தி அமைக்கப்பட்டது. 2010-2011-இல் ரூ.1,134 கோடியாக திட்ட மதிப்பீடு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் குறித்து விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்க அரசு ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பொதுப் பணித் துறை சேலம், திருச்சி கோட்டப் பொறியாளர்கள் குழு இப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

1994-இல் இந்தத் திட்டத்தை அரசு அறிவிக்க அழுத்தம் கொடுத்தவர் டி.எம்.காளியண்ணன்.

94 வயதிலும் இப்போது வரை இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த பல வகையிலும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார் என்றார்.

**ஒகேனக்கல்லில் மீன் விற்பனை அங்காடி அமைக்க வலியுறுத்தல்**

ஒகேனக்கல்லில் மீன் விற்பனை அங்காடி அமைக்க வேண்டும் என மீன்பிடித் தொழிலாளர்கள் வலியுறுத்தினர்.

இதுகுறித்து, ஒகேனக்கல் மீன்பிடித் தொழிலாளர் நலச் சங்கம் சார்பில் அதன் தலைவர் பிரபு, அரூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பி.டில்லிபாபு ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தனிடம் அண்மையில் அளித்த மனு விவரம்:

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில், ஒகேனக்கல், ஊட்டமலை ஆகிய பகுதிகளில் 250-க்கும் மேற்பட்ட மீனவ குடும்பத்தினர் உள்ளனர்.

இவர்கள், காவிரியாற்றில் ஆலம்பாடி முதல் அஜ்ஜிப்பாறை வரை மீன்பிடிக்கின்றனர்.

இந்த நிலையில், ஒகேனக்கல் மீன்பிடித் தொழிலாளர்கள் தாங்கள் பிடித்து வரும் மீன்களை விற்பனை செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட

கடைகள் அந்தப் பகுதியில் இல்லை. பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சார்பில், ஒகேனக்கல்லில் மீன் வெட்டும் கடைக்கு மட்டும் இடம் அமைத்துத் தரப்பட்டுள்ளது. ஆனால், இங்கு மீன் வெட்டுவதோடு மட்டுமல்லாமல், சிலர் கூடுதல் விலைக்கு அங்கீகாரம் இல்லாமல் மீன் விற்பனை செய்து வருகின்றனர். இதனால், மீன்பிடித் தொழிலாளர்கள் உரிய விலைக்கு மீன்களை விற்பனைச் செய்ய முடியாமல், வருவாய் இழக்கும் சூழல் உள்ளது. எனவே, ஒகேனக்கல்லில் மாவட்ட நிர்வாகம் சார்பில், அங்கீகரிக்கப்பட்ட மீன் விற்பனைச் சந்தை அமைத்து அதில், ஒகேனக்கல் மீன் பிடித் தொழிலாளர் நலச் சங்கத்துக்கு தனியாக கடை ஒதுக்க வேண்டும்.

இதுகுறித்து, மாவட்ட நிர்வாகம் ஏற்கெனவே கடந்த 18.11.2014-இல் பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்துக்கு அவசர குறிப்பாணை அனுப்பியது. இருப்பினும், இந்த ஆணை மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை.

எனவே, எங்கள் கோரிக்கை மீது விரைந்து நடவடிக்கை எடுத்து எங்களுக்கு மீன் விற்பனை கடை ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தஞ்சையில் பலத்த மழை:விவசாயிகள் மகிழ்ச்சி**

தஞ்சாவூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்ததால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து கடந்த 9 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் வியாழக்கிழமை கல்லணையை வந்தடைந்தது. அங்கிருந்து தஞ்சாவூர், நாகை, திருவாரூர் ஆகிய டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்காக அன்றே தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இதனால், 3 மாவட்டங்களிலும் சம்பா சாகுபடிக்கு தயாராகியுள்ள விவசாயிகள், இந்த ஆண்டு சம்பா சாகுபடியை வெற்றிகரமாக முடித்து விடலாம் என்று மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை தஞ்சாவூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்தது. இதனால், சம்பா சாகுபடிக்கு தயாராகியுள்ள விவசாயிகள், நிலத்தை உழுது நடவுக்கு தயார் செய்ய இந்த மழை பெரிதும் உதவும் என்று பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.மேலும், வெயிலின் கொடுமையால் தவித்துவந்த மக்களுக்கு காலை, மாலை இருவேளையும் பெய்த மழை அதிலிருந்து சற்று விடுதலை கொடுத்தது.

**விவசாயிகளின் உற்ற நண்பன் தமிழக முதல்வர்**

தமிழக விவசாயிகளின் உற்ற நண்பனாக விளங்குகிறார் முதல்வர் ஜெயலலிதா என்றார் தமிழக வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

மூவேந்தர் முன்னேற்ற கழகம் சார்பில், விவசாயிகள் வாழ்வாதார மாநாடு, கல்லணையைக் கட்டிய கரிகால் சோழனுக்கு மணிமண்டபம் கட்டிய தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கும் விழா தஞ்சாவூர் திலகர் திடலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு மூவேந்தர் முன்னேற்ற கழகத் தலைவர் ஜி.எம். ஸ்ரீதர் வாண்டையார் தலைமை வகித்தார். விழாவில், அமைச்சர் வைத்திலிங்கம் பேசியது:

விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா செய்த நன்மைகளைப் பாராட்டி இந்த விழாவை மூவேந்தர் முன்னேற்ற கழகம் நடத்துகிறது. கருணாநிதி விவசாயிகளுக்கு துரோகம் செய்தவர். தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழக விவசாயிகளுக்கு பல்வேறு நன்மைகள் செய்து அவர்களின் உற்ற நண்பனாக இருந்து வருகிறார். காவிரி பிரச்னையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டி, நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வைத்தவர்.

மேலும், காவிரி மேலாண்மை வாரியம், ஒழுங்காற்றுக் குழு அமைக்க அவர் போராடி வருகிறார். தென்மாவட்ட மக்களின் பிரச்னையான முல்லைப்பெரியாறு பிரச்னையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டி, அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தியுள்ளார்.

காவிரி டெல்டா பகுதியை பாலைவனமாக்கும் மீத்தேன் திட்டத்துக்கு திமுக ஆட்சி காலத்தில் துணை முதல்வராக இருந்த ஸ்டாலின் ஒப்பந்தம் செய்தார்.

அதைத் தடுத்து நிறுத்தியவர் முதல்வர் ஜெயலலிதா. மேட்டூரில் கடந்த 1934-ஆம் ஆண்டு அணை கட்டப்பட்டு, முதன்முதலாக ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை 55 முறை ஜூன் 12-ஆம் தேதிக்கு பிறகே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஆனால், ஜூன் 12-ஆம் தேதிக்கு முன்பே தண்ணீரைத் திறந்தவர் முதல்வர் ஜெயலலிதா மட்டும்தான்.

டெல்டா விவசாயிகள் குறுவை சாகுபடிக்கு மும்முனை மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா செயல்படுத்தி வருகிறார். எனவே, அவருக்கு அனைவரும் எப்போதும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார் அமைச்சர்.

விழாவில், மக்களவை உறுப்பினர்கள் கு. பரசுராமன், ஆர்.கே. பாரதிமோகன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி, எம். ரெத்தினசாமி, துரைக்கண்ணு, மேயர் சாவித்திரி கோபால், மூவேந்தர் முன்னேற்ற கழகத்தின் மாநிலப் பொதுச் செயலர் ஆர்.எஸ்.எம். அருள்ராஜ், மாநில இளைஞரணி தலைவர் ஜி.எம். ரவி வாண்டையார், நிர்வாகிகள் செல்வராஜ், நம்பிவயல் ரவீந்திரன், விப்ரநாராயணன், தஞ்சாவூர் மாவட்டத் தலைவர் பாலாசுண்டையார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"மக்காச்சோளம், பருத்தியில் 1,000 செயல்விளக்கப் பண்ணைகள்'**

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், மக்காச்சோளம் மற்றும் பருத்தியில் 1,000 செயல்விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், வேளாண்மைத் துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்துக்கு தலைமை வகித்த அவர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் அதிகப்படியாக சாகுபடி செய்யப்படும் மக்காச்சோளம், பருத்தி மற்றும் சின்ன வெங்காய விவசாயிகளை

ஊக்குவித்து உற்பத்தித்திறனை அதிகப்படுத்த, நிகழாண்டு மக்காச்சோளம் மற்றும் பருத்தியில் 1,000 செயல்விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன.

மக்காச்சோளத்தில் ஒரு ஹெக்டேரில் 10 மெ.டன் மகசூலும், பருத்தியில் 25 குவிண்டால் சாகுபடி செய்வதற்கும் இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு தலா 1,000 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தேசிய தோட்டக்கலை திட்டத்தில் 350 ஹெக்டேரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்ய இலக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 12 ஆயிரம் மானியம் வழங்கப்படும். விவசாயிகளுக்கு உயிர் உரம் மற்றும் நுண்ணூட்டச் சத்து பாக்கெட்டுகள் வட்டார விரிவாக்க மையம் மூலமாக வழங்கப்படும்.

உரங்கள் தொடக்க வேளாண்மை சங்கங்களிலிருந்து பெற்றுத்தரப்படும். மீதமுள்ள தொகையை பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

எனவே, விவசாயிகளுக்கு அரசின் நலத் திட்டங்கள் முறையாக சென்றடையும் வகையில் அரசு அலுவலர்கள் செயல்பட வேண்டும் என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

கூட்டத்தில், வேளாண்மை இணை இயக்குநர் சு. அய்யாசாமி, வேளாண்மை துணை இயக்குநர் (பொ) எஸ். ஆறுமுகம், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் (பொ) ராஜேந்திரன், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) மா. இந்திரா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## வேளாண் துறைக்கு தரச்சான்று அலுவலகம் அமைக்க வலியுறுத்தல்

பெரம்பலூரில் வேளாண்மை துறைக்கு தரச்சான்று அலுவலகம் அமைக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஊராட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெரம்பலூர் மாவட்ட ஊராட்சிக் கூட்டம், அலுவலக கூட்டரங்கில் அதன் தலைவர் கோ. சகுந்தலா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் என். சேகர், செயலர் க. தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பூர் மற்றும் வேப்பந்தட்டை வட்டார வளர்ச்சி அலுவலகத்துக்கான கட்டடம், ஆலத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்துக்கான கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிப்பது. கிருஷ்ணாபுரம் அரசு மருத்துவ மனையைத் தரம் உயர்த்தவும், பெரம்பலூரில் வேளாண் துறைக்கு தரச்சான்று அலுவலகம் அமைக்கவும், வாலிகண்டபுரம் சார் பதிவாளர் அலுவலகத்துக்கு புதிய கட்டடம் கட்டவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கீழப்புலியூர் பிற்படுத்தப்பட்டோர் தெருவில் ரூ. 1.50 லட்சத்தில் மின் மோட்டார் மற்றும் குடிநீர் தொட்டி அமைப்பது, 2015- 2016 ஆம் நிதியாண்டுக்கான மாநில நிதிக் குழு மானியத்தில் பெரம்பலூர், ஆலத்தூர், வேப்பந்தட்டை, வேப்பூர் ஆகிய ஒன்றியப் பகுதிகளில் ரூ.1.6 கோடியில் கிணறு ஆழப்படுத்துதல், தண்ணீர் தொட்டி அமைத்தல், ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல், கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் அமைத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வது என்பன உள்ளிட்ட 29 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் இரா. வடிவேல், செல்வி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**நெல்லையில் பலத்த மழை**

திருநெல்வேலி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை காலையில் வழக்கம்போல் வெயில் சுட்டெரித்தது. நண்பகலுக்குப் பிறகு வெயிலின் தாக்கம் தணிந்து மேகமூட்டம் காணப்பட்டது. பிற்பகல் 2.30 மணியளவில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. திருநெல்வேலி,

பாளையங்கோட்டை, சீவலப்பேரி, சிவந்திப்பட்டி, தாழையூத்து, கங்கைகொண்டான், மானூர் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.

1 மணி நேரத்துக்கும் மேலாக மழை நீடித்ததால், சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியதால் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

மின்னல் பாய்ந்து இளைஞர் சாவு

கங்கைகொண்டான் காவல் சரகத்துக்கு உள்பட்ட அணைத்தலையூர் தெற்குத் தெருவைச் சேர்ந்த இருதயராஜ் மகன் ஆரோக்கியசாமி (22). இவர், ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் வீட்டில் டிவி பார்த்துக் கொண்டிருந்தாராம். மழை பெய்தபோது ஒளிபரப்பு சரியாக இல்லாததால், கேபிள் வயர் அருகே சென்று பார்த்தாராம். அப்போது மின்னல் பாய்ந்து கைகள் கருகிய நிலையில் சம்பவ இடத்திலேயே இறந்தார்.

கங்கைகொண்டான் போலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து போலீஸார் கூறுகையில், மின்னல் பாய்ந்து இறந்ததாக பொதுமக்கள் கூறுகிறார்கள்; அவர் மின்னல் பாய்ந்து இறந்தாரா அல்லது மின்சாரம் பாய்ந்து இறந்தாரா என்பது குறித்து விசாரித்து வருகிறோம் என்றனர்.

**விராலிமலை பகுதிகளில் பலத்த மழை**

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சுற்றுவட்டாரப் பகுதிகளில் சனிக்கிழமை மாலை இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பெய்ததால் விவாசாயிகள் மற்றும் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளுக்கு நேரடி பணம்

விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான பணத்தை அவர்களின் வங்கிக் கணக்கிலேயே நேரடியாக செலுத்த, வாணிப கழக அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். மத்திய, மாநில அரசுகள் சார்பில் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படுகிறது. தற்போது ஒரு குவிண்டால் சாதாரண நெல் 1,410 ரூபாய்; உயர் ரகம் 1,470 ரூபாய் என ஆதரவு விலை வழங்கப்படுகிறது. ஆனால் அரசியல்வாதிகள் தலையீடால் விவசாயிகளுக்கு முழு பணத்தையும்அதிகாரிகள் வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது.இதையடுத்து, அரசு கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வழங்கும் விவசாயிகளுக்கு அவர்க ளின் வங்கிக் கணக்கிலேயே பணத்தை நேரடியாக செலுத்த, வாணிப கழக அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து வாணிப கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:சமையல் காஸ் மானிய திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர் வங்கி கணக்கில் மானிய தொகை வரவு வைக்கப்படுகிறது. காஸ் மானிய
திட்டத்தை போல் நெல் கொள்முதலுக்கும் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக பணம்
செலுத்தப்பட இருக்கிறது.

முதல் கட்டமாக அக்டோபர் முதல் தஞ்சை, நாகையில் உள்ள 100 கொள்முதல் நிலையங்களில் நெல் வழங்கும் விவசாயிகளுக்கு அவர்களின் வங்கி கணக்கில் பணத்தை நேரடியாக செலுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது, என்றார்.15 லட்சம் டன் நெல்: வாணிப கழகம் 2014 அக்டோபர் முதல் 2015 ஜூலை வரை 15 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கு குறைந்தபட்ச
ஆதரவு விலையாக 95 கோடி ரூபாய் வழங்கப்பட்டு உள்ளது.

## ' மா' வை காப்பாற்ற நீரை விலைக்கு வாங்கும் விவசாயிகள்



ராஜபாளையம்:ராஜபாளையத்தில் குற்றால சீசன் சாரல் மழை பெய்யாததால், மா கன்றுகளை காப்பாற்ற தண்ணீரை விலைக்கு வாங்கும் அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பகுதியில் கடந்த மூன்றுஆண்டுகளாக பருவமழையின் போது போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை. கண்மாய்களுக்கு நீர்வரத்து குறைந்தது.

கண்மாய், நீர்வரத்து கால்வாய் பராமரிப்பு போன்ற பணிகள் முழுமையாக நடக்காததால் கண்மாய்பாசன விவசாயம் முற்றிலும் பாதித்தது.இதனால் விவசாயிகள் மா, தென்னை, பலா விவசாயத்திற்கு மாறினர். மாந்தோப்பை பராமரித்தால் ஆண்டிற்கு ஒருமுறை வரும் சீசனின்போது வருமானம் கிடைக்கும் என்ற நோக்கில் பலர் மா விவசாயத்திற்கு மாறினர்.

இந்த விவசாயத்திற்கும் தற்போது தண்ணீர் கிடைக்காததால் விவசாயிகள் பாதிக்கின்றனர். விவசாய கிணறுகளிலும் போதுமான தண்ணீர் இல்லாததால் டிராக்டர், லாரிகள் மூலம் தண்ணீரை விலைக்கு வாங்கி மா கன்றுகளை காப்பாற்றும் நிலைக்கு ஆளாகி உள்ளனர்.அய்யனார்கோயில் ரோட்டில் பெரியஓடை அருகே

இரண்டரை ஏக்கரில் மா கன்றுகளை நட்டு பராமரித்து வரும் சோமையாபுரத்தை சேர்ந்த விவசாயி ராதா கண்ணன் கூறுகையில், “மற்ற விவசாயத்திற்கு தண்ணீர் அவசியம். மா விவசாயத்தில் கன்றுகளை பராமரித்தால் சீசனின்போது, ஓரளவிற்கு வருமானம் கிடைக்கும்.

குற்றால சீசனின்போது பெய்யும் சாரல்மழை இம் முறை பெய்யாததால் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து உள்ளது. மா கன்றுகளை காப்பாற்ற டிராக்டர் தண்ணீரை லோடுக்கு ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி பயன்படுத்துகிறேன். தினமும் மூன்று லோடு தண்ணீர் தேவைப்படுகிறது.

தற்போது கஷ்டப்பட்டாலும் ஐந்து ஆண்டுகளுக்குபின் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம். ” என்றார்.

**'களை' கட்டிய மார்க்கெட்டில் 'களை' இழந்த காய்கறி விலை**



ஒட்டன்சத்திரம்:வரத்து அதிகரிப்பால் 'களை' கட்டிய ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் காய்கறி விலை விழ்ச்சி அடைந்தது.

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி, வெண்டை, முருங்கை, வெங்காயம் உட்பட 42 வகையான காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கோடை மழைக்கு முன்பு காய்கறி வரத்து இல்லாததால்

மார்க்கெட் களையிழந்து காணப்பட்டது. கோடைமழையால் பல இடங்களில் காய்கறி விளைந்துள்ளது.

தற்போது அறுவடை செய்யப்பட்டு மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. இதனால் கடந்த சில நாட்களாக வரத்து அதிகரித்துள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் 50 சதவீதம் அதிகமாகும். இதனால் காய்கறிகளை ஏற்றிக் கொண்டு மார்க்கெட் வந்த சரக்கு வாகனங்கள் ஒட்டன்சத்திரம்-திண்டுக்கல் ரோட்டிலும், மார்க்கெட் பைபாஸ் ரோட்டிலும் நீண்ட வரிசையில் காத்துக் கிடந்தன. மார்க்கெட்டிற்குள் வாகன நெரிசல் அதிகமாக இருந்தது.

மார்க்கெட்டில் காய்கறி குவிந்தால் வெண்டை, சுரைக்காய், தக்காளி விலை கிலோ ரூ.5க்கும் கீழ் விற்றன. வெண்டைக்காய் மற்றும் சுரைக்காய் தலா ரூ.3க்கும், தக்காளி ரூ.4க்கும், செடி முருங்கை ரூ.8க்கும் விற்பனையானது. காய்கறிகள் விலையானது கட்டுபடியாகாமல் இருப்பதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். 'ஓணம்' பண்டிகை துவங்க இன்னும் சில நாட்களே இருப்பதால் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் கூறினர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து உயர்வு**

மேட்டூர்:மேட்டூர் அணையின் நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 8,255 கனஅடியாக அதிகரித்தது. எனினும், நீர்திறப்பு கூடுதலாக இருப்பதால், நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

நடப்பாண்டில் அதிகபட்சமாக, கடந்த, 9ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம், 96.510 அடியாகவும்,

நீர் இருப்பு, 60.411 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், நீர்திறப்பை விட, நீர்வரத்து வெகுவாக குறைந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் நேற்று, 91.630 அடியாக சரிந்தது.

இந்நிலையில், கர்நாடகாவின் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து, காவிரி கரையோர பாசன பகுதிக்கு திறந்து விட்ட நீரின் ஒரு பகுதி, மேட்டூர் அணைக்கு வந்தது. நேற்று முன்தினம் வினாடிக்கு, 3,138 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 8,255 கனஅடியாக அதிகரித்தது. எனினும், நீர்வரத்தை விட, நீர்வெளியேற்றம் கூடுதலாக இருப்பதால், மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்யும்**

சென்னை:சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:வெப்பச் சலனம் காரணமாக, நேற்று காலையுடன் முடிவடைந்த, 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஆங்காங்கே, 11 செ.மீட்டர் வரை மழை பெய்துள்ளது; இன்றும், மழை தொடர வாய்ப்பு உள்ளது.சென்னையில், இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்; மழை அல்லது இடியுடன் கூடிய மழை, மாலை அல்லது இரவு நேரங்களில் பெய்யலாம். தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அனேக இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.

**கடலூர் மாவட்டத்தில் அரிசி விலை குறைகிறது! ஆந்திர மாநில அரிசி வரத்து எதிரொலி**



கடலூர் : ஆந்திர மாநில அரிசி வரத்து அதிகரித்து வருவதால் மோட்டா ரக அரிசி விலை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைந்து வருகிறது.

தமிழகத்தில் ஆகஸ்ட் மாதத்தில் சம்பா நெல் நாற்று விடும் பருவம் துவங்கியுள்ளது. ஏற்கனவே குறுவை பட்டத்தில் நடவு செய்துள்ள நெல் இம்மாத இறுதியில் அறுவடை துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய நெல் வரத்து இல்லாத இந்த இடைப்பட்ட நாட்களில் அரிசி விலை எப்போதும் உயர்ந்து இருக்கும்.ஆனால் இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக அரிசி விலை குறைந்து வருகிறது.

ஆந்திர மாநிலத்தில் தேவையை விட அதிகளவு நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த அரிசியை வழக்கமாக கொள்முதல் செய்யும் மத்திய அரசு தற்போது கொள்முதல் செய்வதற்கு ஆர்வம் காட்டாமல் உள்ளது.தமிழகத்தில் இருந்து சன்ன ரக அரிசி சிங்கப்பூர், ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது உலக மார்க்கெட்டில் அரிசியின் விலையில் டன்னிற்கு 60 டாலர் விலை குறைந்துள்ளது. இதனால் ஏற்றுமதி செய்வதை விபாபாரிகள் நிறுத்திக்கொண்டனர்.

இது ஒருபுறமிருக்க, நிலத்தடி நீரை பயன்படுத்தி நடவு செய்யப்பட்ட நெல் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஏ.டி.டி. 37 ரகம் மூட்டை 850க்கும், ஏ.டி.டி 45, ஏ.டி.டி., 37, ஐ.ஆர்.50, ரகங்கள் 900 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.இதன் காரணமாக ஆந்திர மாநிலத்தில் உபரியாக உள்ள அரிசியை முழுக்க தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு விற்பனை செய்யப்பட்ட அரிசி விலையோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டு கிலோவிற்கு 6 ரூபாய் அளவில் குறைந்துள்ளது. அதே நேரத்தில் சன்ன ரகங்களான பி.பி.டி., பொன்னி போன்ற ரகங்கள் விலையில் எந்த மாற்றமும் இல்லை.

உதாரணமாக. ஏ.டி.டி., 43 ரகம் கடந்த ஆண்டு 35 ரூபாய் அளவில் விற்பனையானது. இந்த ஆண்டு விலை குறைந்து 29 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அதேப்போல ஐ.ஆர்.50 கிலோ 28லிருந்து 24 ஆகவும், ஐ.ஆர்.20 30 ரூபாயிலிருந்து 25 ரூபாயாகவும்

குறைந்துள்ளது.கேரள மாநிலத்தில் உணவுக்காக பயன்படுத்தப்படும் மோட்டா ரக அரிசி ஆந்திராவில் இருந்து கேரளாகவுக்கு எடுத்துச்சென்று கிலோ 24 ரூபாய்க்கு கடையில் டெலிவரி செய்யப்படுகிறது.

திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் உட்பட தென் மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழையால் நீர்த்தேக்கங்களில் தண்ணீர் போதுமான அளவு நிரம்பி உள்ளது. இதனால் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மேலும் அரிசியின் விலை குறைய வாய்ப்புள்ளதே தவிர உயர வாய்ப்பில்லை என்கின்றனர் நெல் வியாபாரிகள்.

**கால்நடைகளுக்கான இயற்கை தீவனத்திற்கு தட்டுப்பாடு: பருத்தி, தவிடு, கீரை விலை உயர்வு**




பேரையூர்:பேரையூர் தாலுகாவில் கால்நடைகளுக்கான இயற்கை தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால் கால்நடை வளர்ப்போர் கவலையில் உள்ளனர்.விவசாயப் பகுதியான இத்தாலுகாவில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மானாவாரி நிலங்கள் உள்ளன. விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பிற்கும் இப்பகுதியினர் முக்கியத்துவம் அளிக்கின்றனர். ஆடுகள், பசுமாடுகள் வளர்த்து விவசாயிகள் பெருமளவு வருவாய் ஈட்டுகின்றனர்.மழைக் காலங்களில் விளையும் தானியம், பயறு வகைகள் அறுவடைக்கு பிறகு கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படும். வைக்கோல், சோளத் தட்டைகளை விலைக்கு வாங்கி மாடுகளுக்கு கொடுப்பர். இத்தாலுகாவில் மூன்று மாதங்களாக வாட்டி வதைக்கும் வெயில், தொடரும் பலத்த காற்று காரணமாக வறட்சி

நிலவுகிறது. புல், இலை, தழைகள் உட்பட கால்நடைகளுக்கு தேவையான இயற்கை தீவனங்கள் கருகி விட்டன.விலை உயர்வு: இதனால் கோதுமை தவிடு, புண்ணாக்கு விலையும் உயர்ந்து விட்டது. இதனால் கால்நடை வளர்ப்போர் தற்போது தீவனத்திற்காக திண்டாடும் நிலை உள்ளது.

பேரையூர் விவசாயி இருளப்பன்: 200 ஆடுகள் வளர்க்கிறேன். விளைச்சல் நிலங்கள் வறண்டு விட்டன. புண்ணாக்கு, பருத்தி, கோதுமை தவிடு, அகத்தி கீரை ஆகியவற்றை விலைக்கு வாங்கி ஆடுகளுக்கு கொடுக்கிறேன்.

**மதுரையில் முதல் போக நெல் நடவு துவங்கியது :புது நாத்துடன் விவசாயிகள் மகிழ்ச்சி**




மதுரை:மதுரை மாவட்டத்தில் முதல் போகத்திற்கான நெல் நடவு துவங்கியுள்ளது.

மதுரை மாவட்டத்தில் பேரணை முதல் கள்ளந்திரி வரையிலான பாசன வசதிக்காக முதல் போகத்திற்கு தண்ணீர் கடந்த மாதம் வைகை அணையில் இருந்து திறந்து விடப்பட்டது. மதுரையின் பாரம்பரிய விவசாயமான நெல் சாகுபடிக்காக தரமான பல வகை ரகங்களின் நாற்றுகள் விதைக்கப்பட்டன. அது நடவு பருவத்தை எட்டியுள்ளது.சோழவந்தான், அலங்காநல்லுார், மேலுார், உசிலம்பட்டி, சிட்டம்பட்டி, எழுமலை, சேடபட்டி உள்ளிட்ட பகுதிகளில் நெல் நடவுக்கு நிலங்களை உழுது, நீர் பாய்ச்சி, வரப்புகளை வெட்டி, தயார் நிலையில் வைத்திருந்தனர்.

புதுநெல்லு, புது நாத்து:இந்தாண்டு நெல் விவசாயம் செழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், சுதந்திர தினத்தை முன்னிட்டும் நெல் நடவுப்பணியை விவசாயிகள் நேற்று காலை 6 மணியில் இருந்தே ஆர்வமாகவும், மகிழ்ச்சியாகவும் துவங்கினர்.

100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்துக்கு பெண்கள் பலர் செல்வதால் விவசாய பணிகள் மந்தமடைந்திருந்தன. தற்போது கூடுதல் கூலி கிடைப்பதால் நெல் நடவில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.பனையன், விவசாய தொழிலாளி, குமாரம்: வரப்பு வெட்டுக்கூலியாக ஏக்கருக்கு ரூ.750 கிடைக்கும். ஐந்து பேர் சில மணி நேரங்களில் வயலுக்கு நீர் பாய்வதற்கு ஏற்ப வரப்புகளை வெட்டி விடுவோம். நெல் விவசாயம் நடக்கும் வரை தொடர்ந்து வேலை கிடைக்கும்.வீரணன், விவசாய தொழிலாளி, வலசை: பாசிங்காபுரம், வலசை, குமாரம், அலங்காநல்லூார் பகுதிகளில் சிலர் கிணற்று பாசனம் மூலம் நெல், கரும்பு சாகுபடி செய்கின்றனர். தற்போது முதல் போகத்திற்கான நீர், வைகையில் இருந்து கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**மானிய விலையில் தக்கை பூண்டு விதை... கிடைக்கவில்லை:கூடுதல் விலைக்கு வாங்க வேண்டிய கட்டாயம்**

பொன்னேரி:சிறந்த தழைச் சத்தாக உள்ள, தக்கை பூண்டு செடிகள் வளர்க்க, மானிய விலையில் விதைகள் கிடைக்காததால், வெளிச் சந்தையில், கூடுதல் விலைக்கு, விவசாயிகள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

பொன்னேரி பகுதிகளில், சம்பா சாகுபடிக்கு முன், நெல் பயிரிடும் விளை நிலங்களில், சிறந்த தழைச் சத்தாகவும், பசுந்தாள் உரமாகவும் உள்ள, தக்கை பூண்டு செடிகளை வளர்த்து, அதை டிராக்டர் மூலம் உழுவர்.

இது, சம்பா பருவத்தை தொடர்ந்து வரும் குறுவை பருவத்திற்கும், விளை நிலத்திற்கு தேவையான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் உள்ளிட்ட சத்துக்களை அளிக்கும்.வளத்தை பாதுகாக்கும்மேலும்,

நிலத்தடி நீர் உவர்ப்பாக உள்ள பகுதிகளில், உவர்ப்பு தன்மையை குறைத்து, மண் வளத்தை பாதுகாக்கும் தன்மையும், தக்கை பூண்டு செடிக்கு உண்டு.ஒரு ஏக்கருக்கு, 10 கிலோ தக்கை பூண்டு விதைகளை விதைத்தால், 40 நாட்களில் நன்கு வளர்ந்து, நல்ல தழைச்சத்தாக மாறும்.

தக்கை பூண்டு விதை, மானிய விலையில், ஒரு கிலோ, 25 ரூபாய்க்கு வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு அது கிடைக்கவில்லை.

வெளிச் சந்தையில், ஒரு கிலோ, 55 ரூபாய்க்கு, விவசாயிகள் வாங்க வேண்டிய நிலை, ஏற்பட்டு உள்ளது. தழைச்சத்தின் அவசியம் கருதி, விவசாயிகள், கூடுதல் விலை கொடுத்து வாங்கி, விளைநிலங்களில் விதைத்து, வளர்த்து வருகின்றனர்.

இதுகுறித்து, பொன்னேரி அடுத்த, சின்னகாவணம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், 'தக்கை பூண்டு செடி நல்ல தழைச் சத்தாகவும், இயற்கை உரமாகவும் உள்ளது. இதனால், நெல் பயிரிடும்போது, யூரியாவின் பயன்பாடு குறைகிறது. அரசு மானிய விலையில், தக்கை பூண்டு விதைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்," என்றனர்.

பணமாக...

இதுகுறித்து, மீஞ்சூர் ஒன்றிய உதவி இயக்குனர் ரேவதி கூறியதாவது:

கடந்த ஆண்டு வரை, தக்கை பூண்டு விதைகளை, மானிய விலையில் வழங்கி வந்தோம். இந்த ஆண்டு முதல், இரண்டரை ஏக்கருக்கு மானியமாக, 2,000 ரூபாய் வழங்கப்பட உள்ளது.

வெளி சந்தையில், தக்கை பூண்டு விதைகளை வாங்கி பயிரிட்டு வளர்த்த பின், அதற்கான போட்டோ, சிட்டா அடங்கல் ஆகியவற்றுடன் விண்ணப்பித்தால், மானியத் தொகை, விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரிடையாக செலுத்தப்படும்.இவ்வாறு, அவர் கூறினார்.

**பாரம்பரிய மீட்சி கருத்தரங்கு: விவசாயி, மாணவர் பங்கேற்பு**

நாமக்கல்: பாரம்பரிய மீட்சி கருத்தரங்கில், சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், பள்ளி, கல்லூரி மணவ, மாணவியர் உள்பட பலர் பங்கேற்றனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, பாரம்பரிய மீட்சி இயக்கம் சார்பில், சிறப்பு கருத்தரங்கு, நாமக்கல் அடுத்த எருமப்பட்டியில் நடந்தது. தமிழக உழவர் டயக்க மாநிலச் செயலாளர் தமிழ்வேந்தன், "நமது வேளாண் பாரம்பரியம்' என்ற தலைப்பில் பேசியதாவது: பருவ மழையை நம்பி தான் தமிழக விவசாயம் உள்ளது. இருக்கும் நீர் ஆதாரத்தை சேமித்துவைத்தால் மட்டுமே விவசாயம் செய்ய முடியும் என்பதை உணர்ந்த கரிகாலன், பல நூறு ஆண்டுகளுக்கு முன், கல்லணையை கட்டி, ஆற்று நீரை தேக்கி, விவசாயத்திற்கு பயன்படுத்தும் முறையை, தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தினான். ஆனால், இன்றைய கால கட்டத்தில் நீர் மேலாண்மை இல்லை. நம்முடைய வேளாண் பாரம்பரியம் நஞ்சில்லாதது தான். இருந்தும், நவீனத்தின் பெயரில் நஞ்சு கலந்த உணவை உட்கொண்டு, தலைமுறைகள் தாண்டி அந்த உண்மை நமக்கு உறைத்திருக்கிறது. தமிழகத்தில், 2,000 நெல் ரகங்கள் இருந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடந்த, 300 ஆண்டுகளில் இந்த ரகங்களில், 100க்குள் சுருங்கிவிட்டது. அதற்கு காரணம், விவசாயம், தன் பாரம்பரியத்தை விட்டு விலகிச்சென்றது தான். இவ்வாறு அவர் பேசினார்.

எருமப்பட்டி யூனியன் சேர்மன் ஜெகதீசன், விருதுநகர் கொற்றவை இயக்க நிர்வாகி குமரவேல், இயற்கை நல மருத்துவர் தங்கராஜ், பேராசிரியர் நாராயணமூர்த்தி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர். முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாமின் நினைவை போற்றும் வகையில், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு, 700 மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை, புகைப்பட கலைஞர் ராமமூர்த்தி செய்திருந்தார்.

**பரவலாக பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பரவலாக பெய்த மழையின் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், கரும்பு, தக்காளி, நெல், மரவள்ளி கிழங்கு, பருத்தி, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் மற்றும் சிறுதானிய பயிர்களான கேழ்வரகு, சாமை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில், கடந்த சில ஆண்டுகளாக, தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை, விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. போதிய மழையில்லாததால், பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களின் கட்டுப்பாட்டில் உள்ள, 100க்கும் மேற்பட்ட ஏரிகளில், தண்ணீர், நிரம்பாமல் உள்ளது. இதேபோல், நாகவதி, தொப்பையாறு, வாணியாறு உள்ளிட்ட அணைகளும், முழு கொள்ளளவை எட்டாமல் உள்ளது. இதனால், ஏரி, குளங்கள் மற்றும் அணை பாசன வசதிகளை நம்பியுள்ள விவசாயிகளும், கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், விவசாய கிணறுகளின் நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருவதால், தர்மபுரி மாவட்டத்தில் விவசாயி சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்தாண்டு, கோடை மழை, விவசாயிகளுக்கு, ஓரளவுக்கு கை கொடுத்தது. இதேபோல், தென்மேற்கு பருவமழையும் கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் உழவு மற்றும் நடவு பணிகளை தொடங்கினர். ஆனால், விவசாயிகளை தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால், மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்டிருந்த, சோளம், கம்பு, மரவள்ளி கிழங்கு, பருத்தி போன்ற பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டது. விவசாய கிணறுகளில் தண்ணீர் மட்டம், தொடர்ந்து வேகமாக சரிந்து வந்ததால், இறவை பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த, கரும்பு, தக்காளி, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களும் பாதிக்கப்பட்டது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்ததுடன், மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். வானில் கருமேகங்கள் இருந்த போதும், மழை விவசாயிகளுக்கு போக்கு காட்டி வந்தது.

இந்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதியில், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல், நேற்று அதிகாலை வரை பரவலாக மழை பெய்தது. மேலும், நேற்று பகல் பொழுதில், தொடர்ந்து வானம் மழை மேகத்துடன்,

காணப்பட்டதுடன், அவ்வப்போது, சாரல் மழை பெய்தது. இதனால், காய்ந்து வரும் பயிர்களுக்கு, தற்போது பெய்த மழை, உயிர் நீராக அமைத்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். மேலும், "ஒரு சில நாட்கள் தொடர்ந்து மழை பெய்தால், பயிர்கள் அறுவடை பயன் உள்ளதாக இருக்கும்' என, தெரிவித்தனர். மாவட்டத்தில், நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்டசமாக, அரூரில், 67.30 மில்லிமீட்டர் மழையளவு பதிவானது. பாப்பிரெட்டிப்பட்டியில், 48.30 மி.மீ., பாலக்கோடு, 9 மி.மீ., தர்மபுரி, 8 மி.மீ., பென்னாகரம் மற்றும் மாரண்டஹள்ளியில், தலா, 5 மி.மீ., ஒகேனக்கல்லில், 3.60 மி.மீ., மழையளவு பதிவானது குறிப்பிடத்தக்கது.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக மழை**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வானம் பார்த்த பூமி உள்ள மத்தூர் மற்றும் ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதியில் பெய்துள்ள கனமழையால், காய்ந்து போன நிலக்கடலை செடிகள் உயிர் பிழைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்..

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஆண்டுதோறும், 10 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல், நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதியில், அதிக பரப்பில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. இந்நிலையில், வழக்கமாக ஆண்டுதோறும், ஜூலை மாதம் முதல் வாரத்தில், இந்த பகுதியில் பெய்யும், தென்மேற்கு பருவமழையை கொண்டு, நிலக்கடலை விதைப்பு மேற்கொள்ளப்படும். இந்தாண்டு மழை பெய்யும் என்ற நோக்கத்தில், விவசாயிகள் தங்கள் நிலங்களில் ஏர் உழவு செய்து, நிலக்கடலை விதைப்பு மேற்கொண்டனர். ஆனால், நிலக்கடலை விதைப்பு மேற்கொண்டு விதை முளைப்பு மேற்கொணட பின், மாவட்டத்தில் போதிய மழை பெய்ய வில்லை. இதனால், மழை வந்தால் மட்டுமே நிலக்கடலை செடி விளையும் என்ற நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழை பொய்த்து போனதால், நிலங்களில் நிலக்கடலை செடிகள் கருகி வந்தன. நிலக்கடலையை காக்க

விவசாயிகள் மழையை எதிர்பார்த்திருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, கிருஷ்ணிரி மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை பெய்தது. குறிப்பாக, ஊத்தங்கரை மற்றும் மத்தூர் பகுதியில் நல்ல மழை பெய்துள்ளதால் நிலக்கடலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மாவட்டத்தில் அதிக பட்சமாக, ஊத்தங்கரையில், 56.20 மில்லி மீட்டர் மழை அளவு பதிவானது. இதற்கு அடுப்படியாக, கிருஷ்ணகிரி, 40.20 மி.மீ., பெனுகொண்டாபுரம், 35.30, போச்சம்பள்ளி, 31.20, நெடுங்கல், 18.00, பாரூர் 12.00 மி.மீ., மழையளவு பதிவானது. அதிக மழை பெய்த இந்த பகுதிகளில் காய்ந்து கொண்டிருந்த நிலக்கடலை பயிருக்கு உயிர் வந்துள்ளதால் நிலக்கடலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதற்கிடையே, நேற்று காலை முதல், 10 மணி வரை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை பெய்ததால், விவசாயிகள் மட்டுமன்றி, பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

**திருச்சியில் பலத்த மழை**

திருச்சி: திருச்சியில், கடந்த சில வாரங்களாக வெயில் சுட்டெரித்த நிலையில், நேற்று முன்தினம் இரவும், நேற்றும் பலத்த மழை பெய்தது. கோடை காலம் முடிந்த நிலையிலும், திருச்சியில், கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. நேற்று முன்தினம் இரவு, 8 மணிக்கு மழை பெய்யத் துவங்கியது. தொடர்ந்து பலத்த மழை பெய்ததால், சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. சென்ட்ரல் பஸ் ஸ்டாண்ட் பகுதியில், மழையால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. தொடர்ந்து, 2 மணி நேரத்துக்கு மேல் பெய்த மழையால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**கரூர் மாவட்டத்தில் மழை**

கரூர்: கரூர் மாவட்டம் முழுவதும், நேற்று பரவலாக மழை பெய்ததால், விவசாயிகள் மட்டுமின்றி பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம், புகளூர் மரவாபாளையம், முத்தனூர், குளத்துப்பாளையம், வேட்டமங்கலம், ஓலப்பாளையம், நடையனூர்,

புன்னம், நடுப்பாளையம், குப்பம், தவுட்டுப்பாளையம், நொய்யல் சேமங்கி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு, 10 மணி முதல் மழை கொட்டியது. இரவு, பயங்கர மின்னலுடன் மழையும் பெய்தது. இதனால், இப்பகுதிகளில் விவசாயிகள் பயிரிட்டுள்ள நெல், கரும்பு, வாழை, வெற்றிலை உள்ளிட்ட பல்வேறு பணப்பயிர்கள் கடும் வெய்யலின் காரணமாக வாடிய நிலையில், கனமழை காரணமாக, பயிர்கள் துளிர்விட ஆரம்பித்துள்ளது. பூமியும், குளிர்ச்சியாக உள்ளது. இதனால், குறைந்த அளவே தண்ணீர் இருந்த விவசாயக் கிணறுகளில் தண்ணீர் ஊற்று அதிகரித்துள்ளது. இரவு முழுவதும் பெய்த மழை காரணமாக, விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதே போல், கரூர் நகரம், லாலாபேட்டை, குளித்தலை, க.பரமத்தி உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளிலும், நேற்று முன்தினம் இரவு மழை செய்ததால், வெப்பத்தில் தவித்த மக்கள் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**கீழ்பவானி பாசனத்துக்காக பவானிசாகர் அணை திறப்பு**

சத்தியமங்கலம்: கீழ்பவானி பாசனத்துக்காக, பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தின் பிரதான அணையான, பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் மூலம் திறக்கப்படும் நீரால், ஈரோடு, கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில், இரு போகத்தில், 2.07 லட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆக., 15ல், பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பது வழக்கம். நடப்பாண்டில், ஆக., 15ம் தேதி, சனிக்கிழமை மற்றும் பிரதமை திதி என்பதால், ஒரு நாள் கடந்து நேற்று காலை தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் அணையின் நீர்மட்டம், 63 அடியாக குறைந்தது. அணையை நம்பி இருக்கும், 2.07 லட்சம் ஏக்கர் பாசன நிலங்கள், வறண்டு போகும் அச்சம் ஏற்பட்டது. இந்நிலையில், பவானிசாகர் அணையின் நீர் பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்தது. இதனால், பவானிசாகர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து,

நேற்று, 85.10 அடியானது. இதனால், பவானிசாகர் அணையில் இருந்து, ஒற்றை படை மதகுகளுக்கும், சென்னாசமுத்திரம் கிளை வாய்க்காலின் இரட்டை படை மதகுகளுக்கும், நன்செய் பாசனத்துக்காக தண்ணீர் திறக்க, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதன்படி, பவானிசாகர் அணையில் நேற்று காலை, 9.30 மணியளவில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், பட்டன் அழுத்தி தண்ணீரை திறந்து விட்டார். ஈரோடு கலெக்டர் பிரபாகரன் முன்னிலை வகித்தார். கீழ்பவானி வாய்க்காலில் சீறிப்பாய்ந்த நீரில், விவசாயிகள் மலர் தூவி வணங்கினர். இந்த நீர் மூலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களை சேர்ந்த, முதல் போகத்துக்கான, ஒரு லட்சத்து, 3,500 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. நேற்று வினாடிக்கு, 500 கனஅடியாக திறக்கப்பட்ட தண்ணீர், படிப்படியாக அதிகரித்து வினாடிக்கு, 2,300 கனஅடி வரை அதிகரிக்கப்படும். தவிர, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு, 1,000 கனஅடியும், காலிங்கராயன் கால்வாயில, 800 கனஅடியும் நீர் வெளியேற்றப்படுகிறது, என, பொதுப்பணித்துறை அதிகாரி கூறினார். மாவட்ட பஞ்., தலைவர் செல்வம், எம்.பி.,க்கள் செல்வகுமார சின்னையன், சத்தியபாமா, எம்.எல்.ஏ.,க்கள் செங்கோட்டையன், ரமணிதரன், கிட்டுசாமி, நடராஜ், சுந்தரம் உட்பட பலர் பங்கேற்றனர்.

## சம்பா சாகுபடிக்கு விதை நெல் இருப்பு: வேளாண் உதவி இயக்குனர் அறிவிப்பு

வேதாரண்யம்: வேதாரண்யம் பகுதியில், சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்து உள்ளார்.

இது குறித்து, தலைஞாயிறு வட்டார விவசாயத்துறை உதவி இயக்குனர் சந்திரகாசன் வெளியிட்டுள்ள அறிக்கை: வேதாரண்யம் அடுத்த தலைஞாயிறு வடடாரத்தில், சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் முதற்கட்ட பணிகளை முடித்துள்ளனர். கல்லணையில் திறக்கப்பட்ட தண்ணீர்

இன்னும், சில நாட்களில் வேதாரண்யம் பகுதிக்கு வந்தடையும், என்று எதிர்பார்க்கப்படுகிறது. தலைஞாயிறு விவசாயத்துறை அலுவலகத்தில், சம்பா சாகுபடிக்காக நீண்ட கால ரகம், மத்திய கால ரகம், குறுகிய கால ரகங்களான சி.ஆர் 1009, அண்ணா 4, சொர்ணா செப், ஆடுதுறை- 44, ஆடுதுறை- 46 ஆகிய நெல் ரகங்களும், பனங்காடி, பாங்கல், கொத்தங்குடி, நீர்மூளை ஆகிய விரிவாக்க மையத்திலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி, விதை நெல் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல் வழங்கப்படுகிறது. இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

**சம்பா சாகுபடிக்காக வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் தமிழக வாழ்வுரிமை கட்சி கூட்டத்தில் தீர்மானம்**



காட்டுமன்னார்கோவில்

சம்பா சாகுபடிக்காக வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என தமிழக வாழ்வுரிமை கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆய்வுக்கூட்டம்

தமிழக வாழ்வுரிமை கட்சியின் குமராட்சி ஒன்றிய நிர்வாகிகளின் ஆய்வுக்கூட்டம் எள்ளேரி கிராமத்தில் நடந்தது. கூட்டத்துக்கு ஒன்றிய செயலாளர் தமிழ் தலைமை தாங்கினார். மாநில துணை பொது செயலாளர் கண்ணன், நிர்வாக குழு உறுப்பினர் ரமேஷ், மாவட்ட செயலாளர் முடிவண்ணன், நிர்வாகக்குழு உறுப்பினர் தமிழ்தம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் பரமசிவம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக தமிழக வாழ்வுரிமை கட்சியின் நிறுவனர் வேல்முருகன் கலந்து கொண்டு பேசினார்.

கூட்டத்தில் விவசாயிகள் நலன் கருதி சம்பா சாகுபடிக்காக வீராணம் ஏரியில் இருந்து விரைவில் தண்ணீர் திறந்து விட வேண்டும். எள்ளேரி பஸ் நிறுத்தத்தில் இருந்து சிங்கார வீதிவரை சேதமடைந்துள்ள சாலையை விரைந்து சீரமைக்க நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னையில் வருகிற 27–ந்தேதி கட்சி சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் குமராட்சி ஒன்றியத்தில்

இருந்து திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கலந்து கொண்டவர்கள்

இதில் மாவட்ட தலைவர் ஆளவந்தான், மாநில மாணவரணி செயலாளர் ரவி, பிரகாஷ், நிர்வாகிகள் ஆரிப்புல்லா, முகமது எகையா, முனியா,. வக்கீல் பிரிவு வைத்திலிங்கம், சேகர், குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கிளை செயலாளர் உத்திராபதி நன்றி கூறினார்.

**பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைந்தது**



பொள்ளாச்சி

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைந்தது.

வாழைத்தார் ஏலம்

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு ஆனைமலை, பொள்ளாச்சி மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 1100 வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில் ஒரு பூவந்தார் ரூ.150 முதல் ரூ.500 வரைக்கும், கற்பூரவள்ளி ரூ.200 முதல் ரூ.450 வரையும், செவ்வாழைத்தார் ரூ.300 முதல் ரூ.900 வரையும், மோரீஸ் ரூ.150 முதல் ரூ.450 வரையும் ஏலம் சென்றது. இதே போல் ஒரு கிலோ நேந்திரம் ரூ.33–க்கும், கதளி ஒரு கிலோ ரூ.35–க்கும் ஏலம் சென்றது.

வரத்து குறைவு

இது குறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று ஏலத்துக்கு 1500 வாழைத்தார்கள் வந்தன. ஆனால் இந்த வாரம் 1100 தார்கள் மட்டுமே வந்தன. வரத்து குறைந்ததால் சராசரியாக ஒவ்வொரு தாருக்கும் ரூ.50 முதல் ரூ.100 வரை விலை உயர்வு ஏற்பட்டது. சீசன் இல்லாத காலம் என்பதால் வரத்து குறைந்துள்ளது. இனி வரும் வாரங்களிலும் வாழைத்தார் வரத்து குறையும் என தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயம் செழித்து விளங்க தமிழக நதிகளை உடனடியாக இணைக்க அரசு முன்வர வேண்டும்: பழ.நெடுமாறன் பேச்சு**



கோவை

விவசாயம் செழித்து விளங்க, தமிழகத்தில் உள்ள நதிகளை உடனடியாக இணைக்க அரசு முன்வர வேண்டும் என்று நீர்வழிப்பாதை மீட்பு மாநாட்டில் பழ.நெடுமாறன் பேசினார்.

பாதுகாப்பு மாநாடு

கொங்கு மண்டல நீர் ஆதார பாதுகாப்புக்குழு சார்பில் கொங்கு மண்டல நீர்வழிப்பாதை மீட்பு மற்றும் விவசாயிகள் பாதுகாப்பு மாநாடு கோவை சின்னியம்பாளையத்தில் உள்ள பிருந்தாவன் மண்டபத்தில் நடந்தது. மாநாட்டுக்கு தலைவர் காளப்பட்டி கே.எம்.பொன்னுசாமி தலைமை தாங்கினார். முத்துராமலிங்கம், இரா.பழனிசாமி, தேவராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் சு.பழனிசாமி வரவேற்றார்.

மாநாட்டில் உலக தமிழர் பேரவை தலைவர் பழ.நெடுமாறன் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

சாக்கடை ஓடும் ஆறு

சங்க காலத்தில் வைகை நதி வற்றாத ஜீவநதியாக ஓடிக்கொண்டு இருந்ததை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டு உள்ளார். ஆனால் அந்த வைகை நதி இப்போது சாக்கடை ஓடும் ஆறாக மாறிவிட்டது. தற்போது நாட்டில் உள்ள இயற்கை வளங்கள் அனைத்தும்

சூறையாடப்பட்டு வருகிறது. மணல் கொள்ளை, கனிமங்கள் கொள்ளை உள்பட பல்வேறு கொள்ளைகளும் நடந்து வருகிறது. அத்து டன் ஆறுகள் ஆக்கிரமிப்பு, ஆற்றுக்கு தண்ணீரை கொண்டு செல்லும் சிறு சிறு ஓடை ஆக்கிரமிப்பு போன்றவற்றால் ஆறுகள் வறண்டு விட்டன. இந்த நிலை நீடித்தால் தமிழகம் விரைவில் பாலைவனமாகிவிடும்.

நாட்டில் உள்ள நதிகளை இணைத்தால்தான் விவசாயம் பெருகும். அதை இணைக்க யாரும் நடவடிக் கை எடுக்கவில்லை. தமிழகத்தில் உள்ள நதிகளில் மழைக்காலங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி கடலில் கலக்குகிறது. அந்த தண்ணீரை சேமித்து வைத்தாலே பஞ்சம் இருக்காது. எனவே விவசாயம் செழித்து விளங்க, தமிழகத்தில் உள்ள அனைத்து நதிகளையும் இணைக்க அரசு முன்வந்து, அதற்கான பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும். இவ்வாறு பழ.நெடுமாறன் பேசினார்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு பேசும்போது கூறியதாவது:–

விவசாயம் குறைந்துவிட்டது

நமது நாட்டில் 50 சதவீதம் மக்கள்தொகை உயர்ந்து உள்ளது. ஆனால் விவசாயம் 50 சதவீதம் குறைந்து உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் 2½ லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து உள்ளனர். தமிழகத் தில் உள்ள அனைத்து ஆறுகளும் ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கி உள்ளன. அத்துடன் ஆறுகளுக்கு வரும் சிறுசிறு ஓடைகளில் பலவற்றை காணவில்லை.

இதனால்தான் தமிழகத்தில் உள்ள ஆறுகள் வறண்டு காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் விவசாயத்தை கைவிட்டு வேறு தொழிலுக்கு செல்லும் நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே உடனடியாக ஆறுகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, சிறு சிறு ஓடைகளை மீட்க வேண்டும். தமிழகத்தில் 39,202 குளங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஆங்கிலேயர் காலத்தில் தோண்டப்பட் டது. இதில் பெரும்பாலான குளங்கள் மூடப்பட்டு உள்ளது. எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து குளங்களையும் தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றினாலே நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துவிடும். அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். இவ்வாறு ஆர்.நல்லகண்ணு பேசினார்.

தீர்மானங்கள்

மாநாட்டில், கொங்கு மண்டல நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும், அத்திக்கடவு–அவினாசி திட் டத்தை நிறைவேற்ற வேண்டும். மேற்குதொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள ஆக்கிரமிப்பு கட்டிடங் களை அகற்ற வேண்டும், குளம்–குட்டைகளை தூர்வார வேண்டும், ஆறுகள் மற்றும் குளங்களில் கழிவுநீர் கலப்பதை தடுக்க வேண்டும் என்பது உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் மத்திய நதிகள் இணைப்பு உயர்மட்டக்குழு உறுப்பினர் ஏ.சி.காமராஜ், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் எஸ்.குணசேகரன் எம்.எல்.ஏ. உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பொருளாளர் சண்முகம் நன்றி கூறினார்.

## மதிப்பு கூட்டும் முறைகள் குறித்து பண்ணை மகளிருக்கு தொழில்நுட்ப பயிற்சி




தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த பண்ணை மகளிர் மற்றும் விவசாயிகளுக்கு பழங்கள், காய்கறிகளை மதிப்பு கூட்டும் முறைகள் குறித்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

தொழில்நுட்ப பயிற்சி

அட்மா திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், பண்ணை மகளிர் குழுக்களுக்கு பழங்கள், காய்கறிகளில் மதிப்பு கூட்டுதல் குறித்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் முகாம் தர்மபுரியில் நடந்தது. பயிற்சி முகாமிற்கு உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் பாஸ்கர் தலைமை தாங்கினார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் காளியப்பன், முன்னிலை வகித்தார்.

வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) அமுதவள்ளி பயிற்சியை தொடங்கி வைத்தார். இந்த பயிற்சியில் நல்லனஅள்ளி, சோலைக்கொட்டாய், வெள்ளாளப்பட்டி, ஏலகிரியான்கொட்டாய், மேல் பூரிக்கல் ஆகிய கிராமங்களை சேர்ந்த பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள், எம்.பி.க்கள் தத்தெடுத்துள்ள கிராமங்களான பழைய தர்மபுரி, கோணங்கிநாயக்கனஅள்ளி, பாலவாடி ஆகியவற்றை சேர்ந்த விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

விற்பனை முறைகள்

பழங்கள், சிறுதானியங்களை மதிப்பு கூட்டும் முறைகள், மதிப்பு கூட்டப்பட்டபின் விற்பனைக்கு கொண்டு செல்லும் வழிமுறைகள், மதிப்பு கூட்டுவதற்கான தொழில்நுட்பங்கள் குறித்து இந்த முகாமில் விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் ஜோதிலட்சுமி பயிற்சி அளித்தார். வேளாண் விளை பொருட்களை தரம் பிரிக்கும் முறைகள், அறுவடைக்கு பின் சேமிப்பு கிடங்குகளில் சேமித்து வைக்கவும், விற்பனை செய்யவும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை வேளாண் அலுவலர் சுப்பிரமணியன் விளக்கி கூறினார்.

**கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்காக பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு**



பவானிசாகர்

கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்காக பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதில் அமைச்சர், கலெக்டர், எம்.பி.க்கள் பங்கேற்றனர்.

<u>பவானிசாகர் அணை</u>

தமிழகத்தின் 2–வது பெரிய அணை என்ற பெருமை கொண்டது ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அணை. இந்த அணையின் கொள்ளளவு 120 அடியாகும். இதில் சேறும், சகதியும் 15 அடி போக அணையின் நீர்பிடிப்பு உயரம் 105 அடியாகும். அணையில் இருந்து வெளிவரும் தண்ணீர் கீழ்பவானி வாய்க்கால் மூலம் ஈரோடு மற்றும் கரூர், திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

கடந்த 2 ஆண்டுகளாக பவானிசாகர் அணையின் நீர்த்தேக்க பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து குறைந்ததால் அணையின் நீர்மட்டம் கீழ்நோக்கி சென்றது. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு அணையின் நீர்மட்டம் 64 அடியாக இருந்தது. இதனால் அணையில் மீன்பிடிக்கும் தொழில் மற்றும் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினை வந்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது.

<u>முதல்–அமைச்சர் உத்தரவு</u>

இந்த நிலையில் நீலகிரி மலைப்பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்தது. இதனால் பவானிசாகர் அணைக்கு தொடர்ந்து தண்ணீர்

வரத்து அதிகரித்தது. இதைதொடர்ந்து அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து 86 அடியை எட்டியது.

இதைத்தொடர்ந்து பவானிசாகர் அணையில் இருந்து ஒற்றை படை மதகுகளுக்கும் சென்னசமுத்திரம் கிளை வாய்க்காலின் இரட்டைபடை மதகுகளுக்கும் நன்செய் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என விவசாயிகள் முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று முதல்–அமைச்சர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டார்.

<u>தண்ணீர் திறப்பு</u>

அதன்படி பவானிசாகர் அணையில் நேற்று காலை 9.30 மணி அளவில் தண்ணீர் திறந்துவிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் அணையின் பொத்தானை அழுத்தி கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து வைத்தார். ஈரோடு மாவட்ட கலெக்டர் பிரபாகர் முன்னிலை வகித்தார். அணையில் இருந்து சீறிப்பாய்ந்து சென்ற தண்ணீரை விவசாயிகள் மலர்தூவி வணங்கி மகிழ்ந்தனர்.

இந்த தண்ணீர் மூலம் கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய் மற்றும் நீட்டிப்பு கால்வாய் ஒற்றைபடை மதகுகள் மூலமாகவும், சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும் மொத்தம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களை சேர்ந்த 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. நேற்று மதியம் வினாடிக்கு 500 கனஅடியாக திறக்கப்பட்ட தண்ணீர் படிப்படியாக அதிகரித்து வினாடிக்கு 2 ஆயிரத்து 300 கனஅடி வரை அதிகரிக்கப்படும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். நேற்று அணையின் நீர்மட்டம் 86.10 அடியாக இருந்தது.

நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் எஸ்.ஆர்.செல்வம், முன்னாள் எம்.பி., காளியப்பன், எம்.பி.க்கள் செல்வகுமாரசின்னையா (ஈரோடு) சத்தியபாமா (திருப்பூர்), கோபாலகிருஷ்ணன் (நீலகிரி) எம்.எல்.ஏ.க்கள் பி.எல். சுந்தரம் (பவானிசாகர்), கே.ஏ.செங்கோட்டையன் (கோபிசெட்டிபாளையம்) எஸ்.எஸ்.ரமணீதரன் (அந்தியூர்), ஆர்.என்.கிட்டுசாமி (மொடக்குறிச்சி) நடராஜன் (காங்கயம்) பவானிசாகர் ஊராட்சி குழு தலைவர் வி.ஏ.பழனிச்சாமி, சத்தியமங்கலம் ஊராட்சி குழு

தலைவர் சுப்புலட்சுமி அய்யாசாமி, பவானிசாகர் பேரூராட்சி தலைவர் வெங்கடாசலம், துணை தலைவர் செல்வம், அரியப்பம்பாளையம் பேரூராட்சி தலைவர் பி.ஆர்.துரைசாமி, மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் சதுமுகை ஆறுமுகம், சத்தியமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் சி.கே.மாரப்பன், முன்னாள் எம்.எல்.ஏ. ஏ.டி.சரஸ்வதி பொதுப்பணித்துறை கோவை மண்டல தலைமை பொறியாளர் தமிழரசன், சத்தியமங்கலம் தாசில்தார் வேணுகோபால், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் திரளாக கலந்துகொண்டனர்.

**பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.1¼ கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை**



பெருந்துறை

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1¼ கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

<u>கொப்பரை தேங்காய்</u>

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு ஈரோடு, திருப்பூர், தர்மபுரி, சேலம், கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய பகுதிகளில் இருந்து உற்பத்தியாளர்கள், விவசாயிகள் கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர்.

மொத்தம் 3 ஆயிரத்து 369 மூட்டைகளில் ஒரு லட்சத்து 65 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொப்பரை தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது கடந்த வாரத்தை விட 35 ஆயிரம் கிலோ வரத்து குறைவாகும்.

ரூ.1¼ கோடிக்கு விற்பனை

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 76 ரூபாய் 55 காசு முதல் 79 ரூபாய் 10 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 51 ரூபாய் 15 காசு முதல் 75 ரூபாய் 65 காசு வரை ஏலம் போனது. கடந்த புதன்கிழமையை விட கொப்பரை தேங்காயின் விலை கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய் 50 காசு குறைந்திருந்தது. ஓணம் பண்டிகையையொட்டி கேரளா மாநிலத்தில் தேங்காய் எண்ணையின் பயன்பாடு குறைந்ததே கொப்பரை தேங்காய் விலை குறைவுக்கு காரணம் என்று சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம் ரூ.1 கோடியே 26 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

தூத்துக்குடி, விருதுநகர், வெள்ளக்கோவில், காங்கயம், ஊத்துக்குளி, சென்னை, பல்லடம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்த எண்ணை மில் முகவர்கள் கொப்பரை தேங்காயை போட்டி போட்டு வாங்கி சென்றனர்.

தேங்காய் விற்பனை

பெருந்துறை வாரச்சந்தையில் தேங்காய் விற்பனை நடைபெற்றது. இதற்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து விவசாயிகள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர். இதில் முதல் தரம் தேங்காய் ஒன்று 10 ரூபாய் முதல் 11 ரூபாய் வரை விலை போனது. 2–ம் தரம் தேங்காய் 9 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விற்கப்பட்டது. 3–ம் தரம் தேங்காய் 8 ரூபாய் முதல் 9 ரூபாய் வரை விற்பனை ஆனது. மொத்தம் ரூ.15 லட்சத்துக்கு தேங்காய் ஏலம் போனது.

**குன்னூரில் போதிய மழை பெய்யாததால் முட்டைகோஸ் பயிர்களை காக்க தண்ணீர் பாய்ச்சும் விவசாயிகள்**



குன்னூரில் போதிய மழை பெய்யாததால் முட்டைகோஸ் பயிர்களை காக்க விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள்.

<u>மழை குறைவு</u>

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவமழை பெய்யும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவமழை பெய்யும். குன்னூரை பொருத்தவரை தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு குறைவாகவே பெய்து உள்ளது. இதன் காரணமாக தேயிலை மற்றும் மலைகாய்கறி விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

குன்னூர் அருகே உள்ள கூர்காஹில், கூர்காகேம்ப், லூர்து புரம் போன்ற பகுதிகளில் மலைகாய்கறி விவசாயம் 50 ஏக்கரில் நடைபெற்று வருகிறது. இங்கு கேரட், முள்ளங்கி, முட்டைகோஸ், காலிபிளவர், உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் அந்தந்த சீசனுக்கு தகுந்தவாறு பயிரிடப்பட்டு வருகிறது.

<u>தண்ணீர் பாய்ச்சும் விவசாயிகள்</u>

தற்போது முட்டைகோஸ் பயிரிடும் காலம் என்பதால் ஏராளமான விவசாயிகள் முட்டைகோஸ் நாற்றுகளை நடவு செய்து உள்ளனர். ஆனால் மழை குறைவு காரணமாக முட்டைகோஸ் நாற்றுகள் வாடத்தொடங்கி உள்ளன. இதனை தொடர்ந்து குன்னூர் விவசாயிகள்

தங்களுடைய தோட்டங்களில் உள்ள கிணறுகள் மற்றும் நீரோடைகளில் இருந்து தண்ணீர் எடுத்து முட்டைகோஸ் பயிர்களுக்கு பாய்ச்சி வருகிறார்கள்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், குன்னூரில் இந்த ஆண்டு போதிய அளவு மழை பெய்யாததால் சுமார் 50 ஏக்கரில் பயிரிடப்பட்டு உள்ள மலைக்காய்கறிகள் வாடத்தொடங்கி உள்ளன. எனவே பயிர்களை காக்க நீரோடை மற்றும் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து பாய்ச்சி வருகிறோம். எனினும் மழை பெய்தால் மட்டுமே பயிர்கள் நன்கு செழித்து வளரும் என்று தெரிவித்தனர்.

தினகரன்

**வரத்து குறைவு எதிரொலி : துவரம் பருப்பு, பூண்டு விலை அதிரடி உயர்வு**




சென்னை: வரத்து குறைவால் துவரம் பருப்பு, பூண்டு விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. பாசுமதி அரிசி விலை கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம்,

குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு விற்பனைக்காக பருப்பு கொண்டு வரப்படுகிறது. இங்கு இந்த ஆண்டு அதிக அளவு மழை பெய்தால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வரத்து குறைந்துள்ளது. இதன் காரணமாக பருப்பு விலை உயர தொடங்கியுள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.135க்கு விற்கப்பட்டது. இது தற்போது ரூ.140 ஆகவும், துவரம் பருப்பு(பாக்கெட்) ரூ.150 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. துவரம்பருப்பு (2ம் ரகம்) ரூ.105லிருந்து ரூ.125, தான்சானியா துவரம் பருப்பு ரூ.95லிருந்து ரூ.115, உளுந்தம் பருப்பு ரூ.110 லிருந்து ரூ.125, உளுந்தம் பருப்பு பாக்கெட் ரூ.135, பர்மா உளுந்தம் பருப்பு ரூ.100லிருந்து ரூ.115 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. அரியானா, டெல்லியில் இருந்து வரத்து அதிகரிப்பால் கடலைப்பருப்பு ரூ.75லிருந்து ரூ.65, கடலைப்பருப்பு(2ம் ரகம்) ரூ.65லிருந்து ரூ.60, பாசிப்பருப்பு ரூ.120லிருந்து ரூ.110, பாசிப்பருப்பு(2ம் ரகம்) ரூ.110லிருந்து ரூ.100 ஆகவும் விலை குறைந்துள்ளது. பஞ்சாப், அரியானா, சண்டிகார், மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்களில் விளைச்சல் அதிகரிப்பு மற்றும் அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி குறைவு போன்ற காரணங்களால் பாசுமதி அரிசி விலை குறைய தொடங்கியுள்ளது.

இதனால் பாசுமதி அரிசி ரூ.140லிருந்து ரூ.90, பாசுமதி அரிசி(2ம் ரகம்) ரூ.100லிருந்து ரூ.70, பாசுமதி அரிசி(3ம் ரகம்) ரூ.70லிருந்து ரூ.40 ஆக விலை குறைந்துள்ளது. அதே போல, ரூபாலி அரிசி ரூ.30லிருந்து ரூ.28, டீலக்ஸ் அதிசய பொன்னி ரூ.36லிருந்து ரூ.34, பாபட்லா(பழையது) ரூ.44லிருந்து ரூ.42, வெள்ளை ொபான்னி அரிசி ரூ.48லிருந்து ரூ.44, வெள்ளை பொன்னி அரிசி(பழையது) ரூ.54லிருந்து ரூ.52, இட்லி அரிசி ரூ.32லிருந்து ரூ.28, பொங்கல் பச்சரிசி ரூ.34லிருந்து ரூ.30 ஆகவும் விலை குறைந்துள்ளது. சீனா மற்றும் தமிழகத்தில் ஊட்டி போன்ற பகுதிகளில் இருந்து விற்பனைக்காக மலைப்பூண்டு கொண்டுவரப்படுகிறது. இங்கு வரத்து குறைவால் மலைப்பூண்டு ரூ.130லிருந்து ரூ.160, நாட்டுப்பூண்டு ரூ.90லிருந்து ரூ.130, நாட்டுப்பூண்டு(2ம் ரகம்) ரூ.60லிருந்து ரூ.90 ஆகவும் விலை

அதிகரித்துள்ளது. சர்க்கரை ஆலைகள் தற்போது மூடப்பட்டு வருவதால் சர்க்கரை விலை அதிகரித்துள்ளது. 1 கிலோ ரூ.26 லிருந்து ரூ.30 ஆக விலை அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் பொருளாதார வீழ்ச்சியால் பாமாயில் ரூ.55லிருந்து ரூ.49, சன் பிளவர் ஆயில் ரூ.84லிருந்து ரூ.80 சன்பிளவர் ஆயில்(2ம் ரகம்) ரூ.74லிருந்து ரூ.70 ஆகவும் விலை குறைந்துள்ளது. இதேபோல, அக்மார்க் நல்லெண்ணெய் ரூ.220 லிருந்து ரூ.180, ஈரோடு காங்கேயம் நல்லெண்ணெய் ரூ.180லிருந்து ரூ.150, தேங்காய் எண்ணெய் ரூ.220லிருந்து ரூ.180, தேங்காய் எண்ணெய்(2ம் ரகம்) ரூ.180லிருந்து ரூ.150, வனஸ்பதி ரூ.90லிருந்து ரூ.80. விளக்கேற்றும் நல்லெண்ணெய் ரூ.100லிருந்து ரூ.75 ஆகவும் விலை வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. விளைச்சல் குறைவால் வத்தல் ரூ.100லிருந்து ரூ.120, வத்தல் (2ம்ரகம்)80லிருந்து ரூ.100, நீட்டு வத்தல் ரூ.90லிருந்து ரூ.110, கொத்தமல்லி ரூ.110லிருந்து ரூ.140 ஆக விலை உயர்ந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறினார்.

ஓட்டல்களில் சாம்பாருக்கு கட்டுப்பாடு

பருப்பு விலை உயர்வால் சில ஓட்டல்களில் இட்லி, தோசை, மதியம் உணவுக்கு பெயரளவுக்கு மட்டுமே சாம்பார் வழங்கப்படுகிறது. ஒரு முறைக்கு மேல் சாம்பார் கிடையாது என்று சில கடைக்காரர்கள் கறாராக சொல்லுகின்றனர். அதே போல, பாசுமதி அரிசி விலை குறைவால் சிறிய ஓட்டல்களில் பிரியாணி கிலோ ரூ.90 முதல் ரூ.120 வரை விற்கப்படுகிறது. பாக்கெட் பிரியாணி விற்பனையும் களை கட்ட தொடங்கியுள்ளது.

காரணம் என்ன?

விலை உயர்வு குறித்து சொரூபன் கூறுகையில், " பருப்பு இந்த அளவுக்கு விலை உயர்ந்தது கிடையாது. இன்னும் 2 அல்லது 3 மாதங்களில் விளைச்சலில் இருந்து பருப்பு வந்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்புள்ளது. இல்லாத பட்சத்தில் இன்னும் பருப்பு விலை அதிகரிக்க

வாய்ப்புள்ளது. அரிசி வரத்தும் அதிகமாக உள்ளது. இதனால், இன்னும் அரிசி விலை குறைய வாய்ப்புள்ளது. சர்க்கரை விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது".

**ஆக.21ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

சிவகாசி, : விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 21ம் தேதி விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் கலெக்டர் ராஜாராமன் தலைமையில் காலை 11 மணிக்கு நடக்கிறது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் கலந்துகொண்டு விவசாயம் தொடர்பான அனைத்துக் கோரிக்கைகள் குறித்து நேரடியாக மனு அளிக்கலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இயற்கை உரம் தயாரிப்பது எப்படி? வேளாண்துறை விளக்கம்**

கொள்ளிடம் : இயற்கை உரம் தயாரிப்பது குறித்து வேளாண்துறை பேராசிரியர் விளக்கம் அளித்துள்ளார். நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே நல்லூரில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்புல இறுதியாண்டு மாணவிகளின் குழு எண் 27ஐ சேர்ந்த மாணவிகளின் சார்பில் இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்த நடராஜன் தலைமை வகித்தார். இயற்கை விவசாயி கருமுத்து வரவேற்றார். வேளாண்துறை உதவி பேராசிரியர்கள் வெற்றிச்செல்வன், மணிமுத்துவிராழி, சிவக்குமார், மீனாம்பிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்துறை பேராசிரியர் பாலாஜிசங்கர் கலந்து கொண்டு பேசுகையில், சவுடு மண்ணுடன் மாட்டுகோமியத்தை கலந்து 10 நாட்கள் வைத்திருந்தால் அது யூரியா உரமாக மாறும். மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் கழிவுதான் பயிர்களுக்கு உணவாக பயன்படுகிறது. எனவே மண்ணை பாதுகாக்க வேண்டும். நெற்பயிரில் பூச்சியை கட்டுப்படுத்த ஆடுதொடா, வேம்பு, எருக்கு, ஊமத்தை, கொன்றை ஆகிய இலைகளை நறுக்கி மாட்டுகோமியத்துடன் கலந்து ஒருவாரம் முதல் 10 நாட்கள் வரை ஒரு பிளாஸ்டிக் வாளியில் மூடிவைத்து பின்னர் அதனை எடுத்து வடிக்கட்டி பயிருக்கு தெளிப்பதன் மூலம் பூச்சி தாக்குதலிலிருந்து முழுமையாக பாதுகாக்கலாம். இதற்கு பணம் செலவிடத் தேவையில்லை. வைக்கோலை சிறு துண்டுகளாக நறுக்கி குழிவெட்டி போட்டு அதன்

மேல் சானத்தை தெளித்து சிலதினங்கள் கழித்து அதனை இயற்கை டி.ஒ.பி. அடி உரமாக பயன்படுத்தலாம் என்றார். முடிவில் மாணவி முத்தமிழ் நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணை இன்று திறப்பு: ஜெயலலிதா உத்தரவு**



சென்னை - முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:– ஈரோடு மாவட்டம், பவானி சாகர் அணையிலிருந்து கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய் மற்றும் நீட்டிப்புக் கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும், சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும் முதல்பருவ நன்செய் பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய் மற்றும் நீட்டிப்புக் கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும், சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும் முதல்பருவ நன்செய் பாசன நிலங்களுக்கு 16.8.2015 முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர்

மாவட்டங்களில் உள்ள 1,03,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**மீன்வளத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த பணி முன்னேற்றத்தினை அமைச்சர் கே.ஏ.ஜெயபால் ஆய்வு**



சென்னை, தமிழக முதலமைச்சர் ஆணையின்படி மீன்வளத்துறை அமைச்சர்.கே.ஏ.ஜெயபால் மீன்வளத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மீன்வளத்துறை அமைச்சர் கே.ஏ.ஜெயபால் மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், குறிப்பாக கடல் மீனவர்களின் நலனுக்கென செயல்படுத்தப்படும் முக்கியத் திட்டங்களான மீன்பிடி தடைகால நிவாரணம், மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் திட்டம், கடல் மீனவர்களுக்கான தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டம் மற்றும் மீனவ மகளிருக்கென தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் ஆகிய மின்னணு பணபரிவர்த்தனை மூலம் உதவித்தொகை பட்டுவாடா செய்யப்படும் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் மாவட்ட வாரியாக ஆய்வு செய்யப்பட்டது.

கட்டுமான பணியின் பல்வேறு நிலைகளிலுமுள்ள மீன்பிடி துறைமுக மற்றும் மீன் இறங்கு தளங்களின் பணி முன்னேற்றம் குறித்து விரிவாக

ஆய்வு செய்த அமைச்சர்.கே.ஏ.ஜெயபால் , பணிகளை விரைந்து முடிக்க அறிவுரை வழங்கினார்.மேலும் மீனவர்களுக்கான உள்நாட்டு மீன்வளத்தினை மேம்படுத்திடும் பொருட்டு மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு செய்ததுடன் பணிகளை துரிதப்படுத்த அறிவுரை வழங்கினார். மீன்வளத்துறையின் மாநாட்டு கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு செயலர் முனைவர் ச. விஜயகுமார், மீன்துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், , தலைமை அலுவலக மீன்துறை கூடுதல் இயக்குநர்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மண்டல மீன்துறை இணை/துணை/உதவி இயக்குநர்கள், மீன்பிடித் துறைமுக திட்டங்கள் கோட்ட செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**தமிழகத்தில் உள் மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு_: வானிலை ஆய்வு மையம் தகவல்_**

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளின் உள் மாவட் டங்களில் கன மழை பெய்ய வாய்ப் புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் வெப்பச் சலனம் காரணமாக கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வந்தது. இதுவரை மேற்கு மாவட்டங்களில்தான் அதிக மழை பதிவாகியிருந்தது.

**தி.மலையில் 11 செ.மீ.**

தென் மேற்கு பருவ மழை ஆந்திரம் மற்றும் தெலங்கானா மாநிலங்களில் தீவிரமடைந் துள்ளது. தமிழகத்தில் நேற்று முன் தினம் பல இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. திருவண்ணாமலையில் 11 செ.மீ., ராமநாதபுரத்தில் 8 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் திருக்கோவி லூர்

மற்றும் தருமபுரி மாவட்டம் அரூரில் 7 செ.மீ., வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஆகிய இடங்களில் 6 செ.மீ. மழை பெய்துள்ளது.

இந்நிலையில் அடுத்த 2 நாட்களுக்கு தமிழகத்தின் உள் மாவட்டங்கள் குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளை ஒட்டிய மாவட்டங்களில் கன மழை பெய்யக்கூடும். பிற மாவட் டங்களில் ஆங்காங்கே கன மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.___

**மீன் கழிவிலிருந்து பூச்சிவிரட்டி, பழக் கழிவிலிருந்து இயற்கை உரம்_**



படம்: ஆர். சௌந்தர்

கழிவாக வீசப்படும் மீன், பழங்களிலிருந்து பூச்சிவிரட்டி, இயற்கை உரம் தயாரித்திருக்கிறார் தேனி மாவட்ட விவசாயி.

தேனி மாவட்டம் விவசாயம் சார்ந்த மாவட்டம். விவசாயிகள் பலர் அதிக மகசூல் கிடைக்கும் என்பதற்காகச் செயற்கை உரங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். சில விவசாயிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கிராமப் பஞ்சாயத்துகளில் தயாரிக்கப்படும் இயற்கை உரங்களை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர்.

சில நேரம் இயற்கை உரத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டு தேவாரத்தைச் சேர்ந்த ஆர். நவநிதி என்னும் பட்டதாரி விவசாயி, கழிவுநீர் ஓடை, குப்பையில் கொட்டப்படும்

மீன்கழிவு மற்றும் அழுகிய பழங்களைக்கொண்டு கடந்த ஐந்து ஆண்டுகளாக உரம் மற்றும் பூச்சிவிரட்டியைத் தானே தயாரித்துப் பயன்படுத்திவருகிறார்.

**அதிக விளைச்சல்**

இந்தப் பூச்சிவிரட்டியைப் பயன்படுத்துவதன் மூலம் அவருடைய நிலத்தில் நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. இதன்மூலம் லாபம் சம்பாதித்து, மற்ற விவசாயிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறார் நவநிதி.

தனது வீட்டு மொட்டை மாடியில் கீரைச் செடிகள், புதினா, கொத்தமல்லி, ஓமம் போன்ற மூலிகை செடிகளையும் இயற்கை விவசாய முறையில் வளர்த்து வருகிறார்.



விவசாயி ஆர். நவநிதி

**கழிவிலிருந்து**

இதுகுறித்து அவர் பகிர்ந்துகொண்டது: "படிக்கும் காலத்திலிருந்தே இயற்கை விவசாயத்தின் மீது எனக்கு அதிக ஆர்வம் இருந்தது. இதனால் செயற்கை உரங்களைத் தவிர்த்து, இயற்கையான உரங்களைத் தயாரிக்க முடிவு செய்தேன். எதற்கும் பயன்படாமல் குப்பை, சாக்கடையில் வீசப்படும் மீன்கழிவைச் சேகரித்து மீன் கரைசல் என்ற பூச்சிவிரட்டியைக்

கண்டறிந்துள்ளேன். இந்தக் கரைசலைப் பயிர்கள் மீது தெளிக்கும்போது, பூச்சிகளுக்கு எந்தப் பயிர் என்று கண்டறிய முடியாமல் போகிறது.

இதனால் பயிர்களில் பூச்சி, புழுக்களால் ஏற்படும் நோய் தாக்குதல் குறைகிறது. இந்தப் பூச்சிவிரட்டியில் 60 சதவீதத்துக்கு மேல் தழைச்சத்து உள்ளது. இதனால் பயிர்கள் செழிப்பாக வளரும்.

**இயற்கை உரம்**

இதுதவிர அழுகிய பப்பாளி, பூசணி, வாழைப்பழத்தைக்கொண்டு உரம் தயாரித்துள்ளேன். இந்த உரத்தை இடுவதன் மூலம் நுண்ணுயிர்கள் பெருகி மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. என்னுடைய மூன்று ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட மெட்டாஸ் மல்லி என்று அழைக்கப்படும் காக்கரட்டான் பூத் தோட்டத்தில், கடந்த ஐந்து ஆண்டுகளாக இயற்கை விவசாய முறையைப் பின்பற்றி வருகிறேன். ஏழு டன்வரை பூ வரத்து கிடைக்கிறது. செயற்கை உரத்தைப் பயன்படுத்தியிருந்தால் சராசரியாக ஐந்து டன் மட்டுமே வரத்து இருந்திருக்கும்.

கொய்யா, முருங்கைகளுக்கும் இயற்கை விவசாயத்தைக் கடைப்பிடித்து வருவதால், இதுவரை தோட்டத்தில் எந்தவொரு நோய்ப் பாதிப்பும் ஏற்படவில்லை. மற்ற விவசாயிகள் கேட்டுக்கொண்டால் நான் கண்டறிந்த பூச்சிவிரட்டி மற்றும் இயற்கை உரம் தயாரிப்பு குறித்து இலவசமாகப் பயிற்சி அளிக்கத் தயாராக உள்ளேன்" என்றார்.

விவசாயி ஆர். நவநிதி தொடர்புக்கு: 98659 41703.___

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**கோவை–நீலகிரியில் கனமழை**



ஊட்டி, ஆக. 17–

வெப்ப சலனம் காரணமாக தமிழ் நாட்டில் அனேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழகம் முழுவதும் நேற்று இரவு பரவலாக மழை பெய்யத் தொடங்கியது.

கோவை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இரவு 7.40 மணிக்கு மழை பெய்யத் தொடங்கியது. நேரம் செல்லச்செல்ல மழையின் வேகம் அதிகரித்தது.

8.30 மணி வரை மழை வெளுத்து வாங்கியது. கொட்டித்தீர்த்த கன மழையால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது.

சிறுவாணி அணைப் பகுதியிலும் மழை பெய்தது. இதன் காரணமாக சிறுவாணி அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கோவை மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சாகுபடி செய்யப்பட்ட பயிர்களுக்கு இந்த மழை மிகவும் உகந்தது என்று விவசாயிகள் கூறினார்கள்.

நீலகிரி மாவட்டத்திலும் நேற்று இரவு 8 மணிக்கு மழை பெய்யத்தொடங்கியது. நேரம் செல்லச்செல்ல மழையின் வேகம் அதிகரித்தது. 9 மணி வரை கனமழை பெய்தது.

அதன் பின்னர் மழை குறையத்தொடங்கியது. விடிய விடிய மழை தூறிக்கொண்டே இருந்தது. தற்போது பெய்த மழை மலைகாய்கறிகளின் சாகுபடிக்கு மிகவும் உகந்தது என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.
இன்று காலையும் அடர்த்தியான மேகமூட்டம் காணப்பட்டது. இதனால் வாகனங்கள் முகப்பு விளக்கை ஒளிரவிட்டபடி சென்றன.
கடந்த 2 நாட்களாக தொடர் விடுமுறை என்பதால் நீலகிரியில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதியது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு**



மேட்டூர், ஆக. 17–
காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு படிப்படியாக நீர்வரத்து அதிகரித்து வருகிறது.
நேற்று முன்தினம் 3 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 ஆயிரத்து 225 கன அடியாக அதிகரித்தது. இன்று காலை 10 ஆயிரத்து 114 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.
அணையின் நீர்மட்டம் 91.40 அடியாக உள்ளது. அணையில் இருந்து பாசனத்திற்காக 13 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மேட்டூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று இரவு பலத்த மழை கொட்டியது. மேட்டூரில் மட்டும் 6 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.